**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 245/2022**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | தாமரைசெல்வி (PW1) | Caste | |
| Husband's Name | அரசு | Calling | |
| Village | செட்டியார்பேட்டை | Religion | |
| Taluk | | Age | |
| District | காஞ்சிபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 present, Accused A1 absent petition filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 09.06.2022 ஆம் தேதி நான் எனது கணவர் எனது மகன் ஏகாம்பரம் மற்றும் மருமகள் தேவிகா ஆகியோர் குடும்பத்துடன் ஊட்டிக்கு போவதற்காக ஈகோ காரில் சென்று கொண்டிருந்தோம் அவிநாசி தாண்டி ஒரு இடத்தில் தள்ளுவண்டி கடை ஒன்று இருந்தது. சாப்பிடுவதற்காக காரை நிறுத்திவிட்டு நாங்கள் இறங்கினோம். அப்போது ஒரு நபர் அட்ரஸ் கேட்பது போல் எங்கள் அருகில் வந்து நான் கழுத்தில்அணிந்திருந்த 4 பவுன் செயினை பறித்துக் கொண்டு துாரமாக இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்து ஒரு நபருடன் சேர்ந்து அங்கிருந்து சென்றுவிட்டார்.

2. நாங்கள் பதற்றத்தில் இருந்ததால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை மறுநாள் காலை அவிநாசி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதில் உ்ள்ள சங்கதிகளை நான் சொல்ல சொல்ல என் மகன் எழுதினார். **புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 18 நாட்கள் கழித்து நகை கிடைத்துவிட்டதாக போலீசார் சொன்ன தகவலின் பேரில் அவிநாசி காவல் நிலையம் சென்று என் நகையை அடையாளம்

காட்டி பின்பு நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 2 புகைப்படங்களில் உள்ள செயின் தான் என்னிடம் இருந்து பறிக்கப்பட்டு பின்பு நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்றதாகும். **புகைப்படங்கள் (எண்ணிக்கை 2) அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பவத்தின் போது தங்க சங்கலியை பறித்து சென்ற நபரை அடையாளம் தெரியாது பதற்றத்தில் இருந்ததால் சரியாக கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

1. நான் படிக்கவில்லை. நாங்கள் வந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் அந்த சமயத்தில் அந்த வாகனத்தை தற்காலிகமாக ஓட்ட ஏற்பாடு செய்த நபர் என்று கூறியுள்ளேன். பிரதான சாலைக்கும் வழக்கு சம்பவ இடத்திற்கும் சுமார் 10 அடி தொலைவு இருக்கும்.

2. நான் வழக்கு சம்பவத்தன்று சாப்பிட நிறுத்திய கடையின் பெயர் மற்றும் உரிமையாளர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணையில் வழக்கு சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த மறுநாள் காலைதான் புகார் கொடுத்தேன். வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு மறுநாள் காலை வரை எங்கு தங்கி இருந்தேன் என்று போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுகூறவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார்கள் மற்றும் சென்றார்கள் என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன நிற உடை அணிந்திருந்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் நான் பதற்றத்தில் இருந்ததால் சரியாக கவனிக்கவில்லை.

4. எதிரியின் அங்க அடையாளங்களை புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எதிரிகள் வந்ததாக

கூறப்படும் வாகனத்தின் பதிவு எண் மற்றும் நிறத்தை புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகாரில் என்ன விவரம் எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு படித்து கூறினார்கள்.

5. களவு போன தங்க சங்கலியின் வடிவமைப்பு குறித்து புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே நான் களவு போன தங்க சங்கலி அணிந்திருந்தபோது எடுத்த புகைப்படத்தை போலீசாரிடம் அடையாளம் காட்டி கூறினேன். அவ்வாறு போலீசாரிடம் காட்டிய புகைப்படத்தை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபடவில்லை என்றால் சரிதான்.

6. உண்மையில் நான் புகைப்படம் ஏதும் போலீசாரிடம் காண்பிக்கவில்லை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. களவு போன நகை வாங்கியதற்கான ரசீதை நீதிமன்றத்திலோ போலீசாரிடமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் களவு போன நகை என்னுடையது அல்ல அவ்வாறு இருப்பின் அதற்கான இரசீதை தாக்கல் செய்திருப்பேன் என்றால் அது சரியல்ல.

7. எதிரியை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் எனக்கு அடையாளம் காட்டினார்கள். போலீசார் அடையாளம் காட்டியதால்தான் எதிரியை எனக்கு அடையாளம் தெரியும். வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரியை நான் பார்த்ததில்லை. வாங்கிச் சென்ற நகையை தற்போது கொண்டுவரவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க தவறாக அடையாளம் காட்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் இந்த வழக்கில் இருந்து விடுதலை ஆக தக்கவர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவ இடத்தில் போலீசார் எப்போதும் பாதுகாப்பில் இருப்பார்கள் எனவே வழக்கு சம்பவம் நடைபெற சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br>VELLINGIRI LOGANATHAN Digitally signed by VELLINGIRI LOGANATHAN Date: 2025.01.21 19:29:56 +0530<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 245/2022**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | அரசு (PW2) | Caste | |
| Father's Name | வேலுச்சாமி | Calling | |
| Village | செட்டியார்பேட்டை | Religion | |
| Taluk | | Age | |
| District | காஞ்சிபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 present, Accused A1 absent petition filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. கடந்த 09.06.2022 ஆம் தேதி நான் எனது மனைவி எனது மகன் ஏகாம்பரம் மற்றும் மருமகள் தேவிகா ஆகியோர் குடும்பத்துடன் ஊட்டிக்கு போவதற்காக ஈகோ காரில் சென்று கொண்டிருந்தோம் இரவு 11.15 மணியளவில் அவிநாசி தாண்டி ஒரு இடத்தில் தள்ளுவண்டி கடை ஒன்று இருந்தது. சாப்பிடுவதற்காக காரை நிறுத்திவிட்டு நாங்கள் இறங்கினோம். நானும் எனது மகனும் தட்டில் சாப்பாடு வாங்கி சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது என் மனைவி காரை விட்டு இறங்கினார் அந்த சமயத்தில் ஒரு நபர் அவர் கழுத்தில்அணிந்திருந்த 4 பவுன் செயினை பறித்துக் கொண்டு தூரமாக இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்து ஒரு நபருடன் சேர்ந்து அங்கிருந்து சென்றுவிட்டார்.

2. நாங்கள் பதற்றத்தில் இருந்ததாலும் என் மனைவிக்கு தலை சுற்றல் வந்ததாலும் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை மறுநாள் காலை அவிநாசி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வழக்கு சம்பவத்தின் போது தங்க சங்கலியை பறித்து சென்ற நபரை

அடையாளம் தெரியாது பதற்றத்தில் இருந்ததால் சரியாக கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

1. நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நாங்கள் வந்த வாகனம் குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலீசாரிடம் காரை காட்டி கூறினேன் . நாங்கள் வந்த வாகனத்திற்கு சுங்கச்சாவடியில் கட்டனம் செலுத்தியதற்கான இரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் கட்டணம் இணைய வழியில் செலுத்தப்பட்டது. மனைவி சத்தம் போட்ட பிறகுதான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். மனைவி கூறியபிறகுதான் வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2.வழக்கு சம்பவ இடத்திற்கு தங்க சங்கலியை பறித்த நபர்கள் எந்த திசையில் இருந்து வந்து எத்தனை நபர்கள் சேர்ந்து பறித்துக் கொண்டு எந்த திசை நோக்கி சென்றார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த அடுத்த நாள் தான் புகார் கொடுத்தேன். புகாரில் எனது மனைவி வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு மருத்துவமனைக்கு சென்ற விவரத்தை குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறப்பட்டுள்ளது. மதியம் 12.00 மணிக்கு மேல் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. நான் எனது மகன் எனது மனைவி மற்றும் எனது மருமகள் ஆகியோர் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் என்னை போலீசார் விசாரித்து கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. எனது குடும்ப நபர்கள் தவிர வேறு யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்னிட்டு வழக்கு சம்பவ இடத்திற்கு போலீசாருடன் சென்றேன். போலீசாருக்கு வழக்கு சம்பவ இடத்தை நான் அடையாளம் காட்டினேன். களவு போன நகை எனது மனைவிக்கு சொந்தமானது என்பதை காட்ட இரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை மனைவி கொடுத்த பொய் புகாரின் பேரில் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br>VELLINGIRI LOGANATHAN Digitally signed by VELLINGIRI LOGANATHAN Date: 2025.01.21 19:30:14 +0530<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 245/2022**
**Prosecution Witness**:3

| Name | ஏகாம்பரம் (PW3) | Caste | |
|---|---|---|---|
| Father's Name | அரசு | Calling | |
| Village | செட்டியார்பேட்டை | Religion | |
| Taluk | | Age | |
| District | காஞ்சிபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 present, Accused A1 absent petition filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது அம்மா மற்றும் அ.சா.2 எனது அப்பா. கடந்த 09.06.2022 ஆம் தேதி நான் எனது தாயார் எனது தகப்பனார் மற்றும் மனைவி தேவிகா ஆகியோர் குடும்பத்துடன் ஊட்டிக்கு போவதற்காக ஈகோ காரில் சென்று கொண்டிருந்தோம் இரவு நேரம் அவிநாசி தாண்டி ஒரு இடத்தில் தள்ளுவண்டி கடை ஒன்று இருந்தது. சாப்பிடுவதற்காக காரை நிறுத்திவிட்டு நாங்கள் இறங்கினோம். நானும் எனது தகப்பனாரும் தட்டில் சாப்பாடு வாங்கி சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது என் அம்மா காரை விட்டு இறங்கினார் அந்த சமயத்தில் ஒரு நபர் அவர் கழுத்தில்அணிந்திருந்த 4 பவுன் செயினை பறித்துக் கொண்டு தூரமாக இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்து ஒரு நபருடன் சேர்ந்து அங்கிருந்து சென்றுவிட்டார்.

2. நாங்கள் பதற்றத்தில் இருந்ததாலும் என் அம்மாவிற்கு தலை சுற்றல் வந்ததாலும் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை மறுநாள் காலை அவிநாசி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வழக்கு சம்பவத்தின் போது தங்க சங்கலியை பறித்து சென்ற நபரை

அடையாளம் தெரியாது பதற்றத்தில் இருந்ததால் சரியாக கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

1. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு சம்பவத்தின்போது நான் அம்மா சத்தம் போட்ட பிறகு பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் அம்மாவை பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். நான் எனது முதல் விசாரணையில் எதிரி எந்த திசையில் இருந்து வந்து எந்த திசை நோக்கி தங்க சங்கலியை பறித்து சென்றார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் உருவ அமைப்பு குறித்து போலீசாரின் விசாரணையின் போது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்வத்திற்கு அடுத்தநாள் தான் புகார் கொடுத்தோம். சுமார் மதியம் 12.00 மணியளவில் கொடுத்தோம். நாங்கள் வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு புகார் கொடுக்கும் வரை எங்கிருந்தோம் என்று போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான், எனது தாயார் மயக்கம் ஆனதாலும் எனக்கு அடிபட்டு இருந்ததாலும் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு உறவினர்களுக்கு தகவல் சொன்னபிறகு புகார் கொடுத்தோம்.

2. போலீசார் விசாரணையின் போது மருத்துவமனை சென்றிருந்த விவரத்தை கூறியுள்ளேன் ஆனால் அது குறித்து ஆவணங்கள் ஏதும் போலீசாரிடம் கொடுக்கவில்லை. உண்மையில் மருத்துவமனை சென்றிருந்தால் அதற்கான இரசீதை தாக்கல் செய்திருப்பேன் என்றால் போலீசார் அதனை கேட்கவில்லை அதனால் கொடுக்கவில்லை. களவு போன நகையின் இரசீதை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையின் போது நகையின் உருவ அமைப்பு குறித்து நான் கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் சொல்ல சொல்ல நான் புகார் எழுதினேன் என்றால் நான் நடந்த சம்பவம் குறித்து கூறினேன், புகார் இவ்வாறு எழுதவேண்டும் என்று கூறினார்கள் அதன் படி புகார் எழுதிக் கொடுத்தேன். உண்மையில் வழக்கு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை எனது தாயார் கொடுத்த பொய் புகாரின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர்

**கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| **சாட்சியின் கையொப்பம்** | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>VELLINGIRI LOGANATHAN<br>Digitally signed by VELLINGIRI LOGANATHAN<br>Date: 2025.01.21 19:30:23 +0530<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 245/2022**
**Prosecution Witness**:4

| | | | |
|---|---|---|---|
| Name | தேவிகா (PW4) | Caste | |
| Husband's Name | ஏகாம்பரம் | Calling | |
| Village | செட்டியார்பேட்டை | Religion | |
| Taluk | | Age | |
| District | காஞ்சிபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 present, Accused A1 absent petition filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார் மற்றும் அ.சா.2 எனது மாமனார், அ.சா.3 எனது கணவர். கடந்த 09.06.2022 ஆம் தேதி நான் எனது மாமியார் எனது மாமனார் மற்றும் கணவர் ஆகியோர் குடும்பத்துடன் ஊட்டிக்கு போவதற்காக ஈகோ காரில் சென்று கொண்டிருந்தோம் இரவு நேரம் அவிநாசி தாண்டி ஒரு இடத்தில் தள்ளுவண்டி கடை ஒன்று இருந்தது. சாப்பிடுவதற்காக காரை நிறுத்திவிட்டு நாங்கள் இறங்கினோம். என் அத்தை காரில் இருந்து இறங்கும்போது அவர் பக்கத்தில் ஒரு நபர் வந்து நின்றார் அவர் என் அத்தை கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் செயினை பறித்துக் கொண்டு துாரமாக இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்து ஒரு நபருடன் சேர்ந்து அங்கிருந்து சென்றுவிட்டார்.

2. என் கணவர் அவர்களை துரத்தினார் ஆனால் பிடிக்கமுடியவில்லை அதில் என் கணவருக்கு காயம் ஆனது எனவே முதலுதவி செய்வதற்காக மருத்துவமனை சென்றுவிட்டோம். நாங்கள் பதற்றத்தில் இருந்ததால் ஒரு அறை எடுத்து தங்கிவிட்டு மறுநாள் காலை அவிநாசி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வழக்கு சம்பவத்தின் போது தங்க சங்கலியை பறித்து சென்ற நபரை அடையாளம் தெரியாது

பதற்றத்தில் இருந்ததால் சரியாக கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

1. வழக்கு சம்பவம் நடைபெறும்போது காரில் இருந்து நான் வெளியே இறங்க வந்தேன். போலீசார் விசாரணையின் போதோ முதல் விசாரணையின் போதோ நான் காரில் எந்த பகுதி கதவு வழியாக இறங்கினேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்,போலீசார் விசாரணையின் போதோ முதல் விசாரணையின் போதோ நான் எதிரியின் உருவ அமைப்பு குறித்தோ அவர்அணிந்திருந்த நகை குறித்தோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போதோ முதல் விசாரணையின் போதோ நான் எதிரிகள் எந்த திசையில் இருந்து வந்தார்கள் எந்த திசை நோக்கி சென்றார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

2. போலீசார் விசாரணையின் போதோ முதல் விசாரணையின் போதோ நான் எந்த மருத்துவமனைக்கு சென்றோம் என்றோ அதன் இரசீதுகளை தாக்கல் செய்தோம் என்றோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போதோ முதல் விசாரணையின் போதோ களவு போன நகை எனது அத்தையுடையது என்பதை காட்ட புகைப்படம் ஏதேனும் போலீசாரிடம் காட்டினேனா என்றால் எனது அத்தை காண்பித்தார்கள். வழக்கு சம்பவம் குறித்து எதிரிகளை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் யாரும் காட்வில்லை. போலீசார் விசாரணையின் போது நகையின் உருவ அமைப்பு குறித்து நான் கூறவில்லை என்றால் சரிதான். காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br>VELLINGIRI LOGANATHAN Digitally signed by VELLINGIRI LOGANATHAN Date: 2025.01.21 19:30:36 +0530<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

<table>
<tr><td colspan="3">Free True copy of Deposition received</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>Assistant Public Prosecutor</td><td>Witness</td><td>Accused/ Defence counsel</td></tr>
</table>